**செ. கு. எண்: 122** **நாள்: 23.07.2018**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின்

அறிக்கை – 23.7.2018

சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், கோல்நாயக்கன்பட்டி கிராமம், ரெட்டியூர் காவேரி ஆற்றுப் பகுதியில் 22.7.2018 அன்று கோல்நாயக்கன்பட்டி கிராமம் மற்றும் ஈரோடு மாவட்டம், பெருந்துறையை அடுத்த விஜயமங்கலத்தைச் சேர்ந்த ஆறு நபர்கள் காவேரி ஆற்றில் குளிக்கச் சென்ற போது, ஆற்றில் அடித்துச் செல்லப்பட்டனர் என்ற செய்தியை அறிந்து மிகவும் வேதனை அடைந்தேன்.

இந்த செய்தி குறித்து அறிந்தவுடன், ஆற்று நீரில் அடித்துச் செல்லப்பட்டவர்களை பத்திரமாக மீட்டு, அவர்களுக்கு உயரிய சிகிச்சை அளிக்கத் தேவையான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்குமாறு சேலம் மாவட்ட நிருவாகத்திற்கும், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை மற்றும் காவல் துறை அதிகாரிகளுக்கும் நான் உத்தரவிட்டேன்.

எனது உத்தரவின் பேரில், மாவட்ட ஆட்சியர், காவல் துறை, மருத்துவத் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையைச் சேர்ந்த பணியாளர்கள் மீட்புப் பணியில் தீவிரமாக ஈடுபட்டு திரு. கோபால் என்பவரின் மகள் செல்வி தனுஸ்ரீ என்பவரை பத்திரமாக மீட்டனர். ஒருவரை தேடும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

குளிக்கச் சென்ற போது ஆற்றில் அடித்துச் செல்லப்பட்ட நான்கு நபர்களின் உடல்கள் சடலமாக மீட்கப்பட்டது என்ற செய்தியையும்;

மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், கீழவளவு உள்வட்டம், கீழையூர் கிராமத்தில் அமைந்துள்ள குவாரி பள்ளத்தில் தேங்கியிருந்த தண்ணீரில் 22.7.2018 அன்று குளிக்கச் சென்ற மேலூர் டவுன் வெள்ளத்தான்பட்டியைச் சேர்ந்த திரு. சக்கரை முகம்மது என்பரின் மகன்கள் திரு. சதாம் உசேன் மற்றும் திரு. சலீம் ஆகிய இரண்டு நபர்கள் எதிர்பாராதவிதமாக நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற செய்தியையும் அறிந்து மிகவும் வேதனை அடைந்தேன்.

உயிரிழந்த ஆறு நபர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேட்டூர் அணையில் நீர் திறந்தவுடன், சம்பந்தப்பட்ட காவேரி கரையோர மாவட்ட நிருவாகங்கள் எடுக்க வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்குமாறு நான் ஏற்கனவே உத்தரவிட்டிருந்தேன்.

எனது உத்தரவின் பேரில், நீர் திறப்பு காலங்களில், காவேரி ஆற்றின் நீர்பிடிப்பு பகுதிகள், நீர் வழித்தடங்கள் மற்றும் அணையின் தாழ்வான பகுதிகளில் வசிக்கும் பொதுமக்கள், மேடான பகுதிக்குச் செல்லுமாறும், குழந்தைகளை நீர்நிலைகளில் அனுமதிக்காமல் இருக்கும் படியும் தண்டோரா, தொலைக்காட்சி மற்றும் செய்தித்தாள்கள் வாயிலாக மாவட்ட நிர்வாகங்கள் முன் எச்சரிக்கை செய்திகளை விடுத்து வருகிறது.

எனினும், இனி வருங்காலங்களில் இதுபோன்ற துயரச் சம்பவங்கள் ஏற்படா வண்ணம் பொதுமக்கள் எச்சரிக்கையாக இருக்கவும், ஆறு மற்றும் ஏரியில் குளிக்கச் செல்லும் போது, அதற்குரிய பாதுகாப்பான இடத்தில் மட்டுமே

குளிக்கவும், அனுமதி இல்லாத இடங்களில் செல்ல வேண்டாம் எனவும் பொது மக்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இந்தத் துயர சம்பவத்தில் உயிரிழந்த ஆறு நபர்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**